பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 31 செவ்வாய்க்கிழமை (13-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்137

## அ'புரத்தில் தாக்குதல்

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள இராணுவ மையம் ஒன்றை நேற்று விடுதலைப் புலிகள் தாக்கியதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இத்தாக்குதலில் பல படையினர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்பட்டது. (உ-3-6)

செஞ்சிலுவை அதிகாரி கொலை:

## இன்று யாழ். நகரில் கண்டனப் பேரணி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை உப தலைவர் புவனேந்திரன் படுகொலையுண்டதைக் கண்டித்து இன்று காலை கண்டனப் பேரணி ஒன்று யாழ். நகரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இப்பேரணி நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் இருந்து கோவில் வீதியில் உள்ள செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அலுவலகம் வரை நடைபெறும்.

அதேவேளை—

யாழ் மாவட்டத்தில் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும், சமூக சேவை மன்றங்களும் ஒன்றிணைந்து கண்டனப்பேரணி நடத்துவது குறித்தும், தமது பாதுகாப்புக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் ஆராய்வதற்காக இன்று பிற்பகல் 3 மணியளவில் வை. எம். சீ. ஏ மண்டபத்தில் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளன. [உ-3-17]

பூநகரிப் பாதை விவகாரம்:

## ஜெனிவா தலைமையகம் திட்டத்தை அங்கீகரித்தது

யாழ்ப்பாணம், ஏப். 13

பூநகரி—சங்குப்பிட்டிப் பாதையை திறப்பது தொடர்பாக அகதிகளுக்கான ஐ நா. தூதரகக் கொழும்பு அலுவலகம் தயாரித்த பூர்வாங்க செயற்பாட்டுத் திட்டத்தை ஜெனிவாவில் உள்ள தலைமையகம் அங்கீகரித்துள்ளது வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வளங்களை வழங்கவும் அ. ஐ. நா. தூதரகத் தலைமையகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தல் ஜெனிவா தலைமையகத்தில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு அலுவலகத்துக்குக் கிடைத்ததாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாத இறுதியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலைப் பகுதியிலிருந்து 12 வயோதிபர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப் 13

இளவாலைப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரிடம் சிக்குண்டிருந்த பொதுமக்களில் 12 வயோதிபர்கள் படையினரால் விடுவிக்கப்பட்டு நேற்று யாழ்ப்பாணம் கூட்டிவரப்பட்டனர்.

பலாலிக்குச் சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுப் பிரதிநிதிகள் இந்த 12 பேரையும் கப்பல் மூலம் பருத்தித்துறைக்குக் கூட்டி வந்தனர்.

அவர்களில் 9 பேர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இரு வயோதிபர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் மற்றொருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற பின்னர் தம் உறவினர் வீட்டுக்குச் சென்றார்.

பார்வை மற்றும் கேட்கும் சக்திகளை இழந்து தம்மைத் தாமே கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்த வயோதிபர்களே பெரும்பாலும் விடுவிக்கப்பட்டவர்களாவர். (உ-15)

## ம.எண்ணெய், தபாலுடன் 'வாதுவ', 'குமாரி' வந்தன

### "நகர" கப்பலில் பயணிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 13

ஐநூறு பரல் மண் எண்ணெய், 85 தபால் பொதிகள் அரிசி, சீனி, பால்மா மற்றும் உணவுப் பொருள்கள், உணவு முத்திரை ஆகியவற்றுடன் "வாதுவ" கப்பலும்—

3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மா மற்றும் இலங்கை வங்கிக்கான 3 கோடி ரூபா பணத்துடன் "குமாரி" கப்பலும்—

நேற்று பருத்தித்துறையை வந்தடைந்தன.

இக்கப்பல்களில் இருந்து ம. எண்ணெய் பரல்களும், பணமும் மற்றும் பருத்தித்துறைக்கு ஏற்கனவே வந்திருந்த "குமண" கப்பலில் இருந்து பொருள்களும் நேற்று ஒரே சமயத்தில் இறக்கப்பட்டன.

"நகர" கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த 79 பயணிகள் அங்கிருந்து குமண மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தனர். (உ-35-87-109)

## ம.எண்ணெயுடன் நில்கிரி 22ஆம் திகதி இங்கு புறப்பாடு

யாழ்ப்பாணம், ஏப், 13

ஒரு தொகுதி மண்எண்ணெய் பரல்களை ஏற்றிக் கொண்டு 'நில்கிரி' கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் 5 ஆயிரம் பரல் மண்எண்ணெயை அனுப்ப இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

அதன்படி ஒதுக்கப்பட்ட அடுத்த 5 ஆயிரம் பரல்களில், ஒரு தொகுதி பரல்களை ஏற்றிக் கொண்டு 'நில்கிரி' கப்பல் இங்கு வரவுள்ளது.

# புதிய சீனச்சகடை விமானப்படைக்கு

## இயக்கச்சிப் பகுதியில் புலிகள் வீழ்த்தியதற்குப் பதிலாக

கொழும்பு,ஏப்ரல்13

சீனத் தயாரிப்பான வை-8 ரக போர் விமானம் (சகடை விமானம்) ஒன்றைக் கொள்வனவு செய்யும்படி அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு வடபகுதியில் இயக்கச்சிப் பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருந்த போது விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட சகடை விமானத்துக்கு பதிலாகவே அதே ரக புதிய விமானம் கொள்வனவு செய்யப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஒரு வருட காலமாக உதிரிப்பாகங்கள் இல்லாத காரணத்தினால் செயலிழந்த நிலையில் உள்ள இன்னொரு வை-8 போர் விமானத்தை சீனாவுக்கு கொண்டு சென்று விமானப் போக்குவரத்துக்கு ஏற்றதாகத் திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய வை-8 விமானம்

(6ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக

## மாகாணசபை தேர்தலின் பின் தெரிவுக்குழு யாழ். வருமாம்

மாகாணசபைத் தேர்தலின் பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக் குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"சண்டே ரைம்ஸ்" வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவைச் சந்தித்த பின் தெரிவுக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் என்று தாம் நம்புவதாக யாழ். மாவட்ட எம். பியான கே. ஸ்ரீநிவாசன் தெரிவித்தார் என "சண்டே ரைம்ஸ்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் விஜயம் செய்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கை ஒழுங்குகளை மேற்கொள்ளும் நடைமுறையை வகுப்பதில் இராணுவத் தளபதி ஏற்கனவே ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகின்றது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## உபஜனாதிபதியை நியமிக்கும் யோசனை தெரிவுக்குழு முன்!

கொழும்பு, ஏப். 13

உப ஜனாதிபதி ஒருவரை நியமிக்கும் யோசனை ஒன்றை, இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிசீலனை செய்யவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

உபஜனாதிபதி வடக்கு-கிழக்கு மாகாணங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் கொண்டவராக இருப்பார் என்று அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டேரைம்ஸ்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

இம்மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் ஆரம்பமான பின்னர் இடம்பெறும் தெரிவுக் குழுவின் அமர்வில் இந்த யோசனை சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

மீள் திருத்தியமைக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட

( 6ஆம் பக்கம் பார்க்க)

### இன்று கிளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஏப். 13

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### புதுவருட விடுமுறை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உதயன் அலுவலர்களுக்கு நாளை புதன்கிழமை விடுமுறை தினமாதலால் வியாழக்கிழமை (15 - 4 - 93) உதயன் வெளிவரமாட்டான்.

வெள்ளிக்கிழமை (16 - 4 - 93) உதயன் வழமைபோல் உங்கள் கரங்களில் தவழ்வான் என அறியத்தருகிறோம்.

—நிர்வாகத்தினர்

பேர்லின் வர்த்தக சந்தையில்

## ஈழக்குழுக்களின் 'நோட்டீஸ்' இலங்கை அரசுக்கு எதிராக!

கொழும்பு அரசு இனக் கொலையில் ஈடுபட்டுள்ளது என்று கூறும் துண்டுப்பிரசுரங்கள் ஜேர்மனியில் நடைபெறும் பேர்லின் வர்த்தக சந்தையில் தமிழ் ஈழம் குழுக்களினால் விநியோகிக்கப்பட்டன.

இலங்கைக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்வதை கைவிடும்படி வெளிநாட்டு உல்லாசப்பயணிகளுக்கும் அத் துண்டுப் பிரசுரங்களில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

உல்லாசப் பயணம் மூலம் பெறும் பணத்தை கொழும்பு அரசு ஆயுதங்களை வாங்கி மக்களைக் கொல்லவே பயன்படுத்துவதாகவும் துண்டுப் பிரசுரங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை—இலங்கைக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று வெளிநாட்டவர்களை உலகத் தமிழர் சங்கம், ஈழம் நலன் புரி சங்கம் மற்றும் இலங்கையில் மனித உரிமைகளைப் பேணும் இயக்கம் ஆகியன கேட்டுள்ளன. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டெடுக்கப்பட்டுள்ளன

மகளிர் கை மணிக்கூடு ஒன்றும், குழந்தை விரல் மோதிரம் ஒன்றும் சிமாட்டி புடைவைக் கடையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

சிமாட்டி ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (சி-4923)

---

பிரதேசச் செயலகம் நல்லூர்

## புத்தாண்டு தின விழா

இடம்: இளங்கலைஞர் மன்ற கலா மண்டபம். (சட்டநாதர் வீதி, நல்லூர்)

காலம்: 15 - 04 - 1993 வியாழன் பி. ப. 4.00 மணி

பிரதம விருந்தினர்:
திரு - திருமதி கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர் / மாவட்ட ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
திருமதி ம. சண்முகதாஸ்
திரு. வே. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகர ஆணையாளர்)

கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

எமது பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பொது மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர் பிரதேசச் செயலாளரும்,
பணியாளர் குழுவும்.

பிரதேசச் செயலகம்,
நல்லூர். (சி/4837)

---

'யாழோசை' மேம்பாட்டு நிதிக்காக
யாழ். கைலாசபதி கலையரங்கில்

## வேணுகான இசையும்

பல வாத்தியங்களின் பின்னணியில்
யாழோசையினருடன் யாழ். பல்கலைக் கழகப்
பாடகர்கள் பங்கு கொள்ளும்

## செந்தமிழ்ப் பாட்டு

இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்

இசை நெறியாக்கம்:— யாழோசை கண்ணன்

எதிர்வரும் 2 ஆம் திகதி
காலை 9 மணிக்கும் மாலை 3 மணிக்கும்
(டிக்கெட்டுகள் மண்டப வாயிலில்)

விளம்பர அன்பளிப்பு:
**சுப்பஸோ ஓடியோ வீடியோ சென்ரர்**
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4839)

---

சர்வதேச விதிகளை மீறி யாழ். செஞ்சிலுவைச் சங்க
உப தலைவர்
பலியாக்கப்பட்டமைக்கு அதிருப்தியை
தெரிவிக்குமுகமான

## ஆலோசனைக் கூட்டம்

இடம்: யாழ். வை. எம். சி' ஏ. மண்டபம்

காலம்: 13—04—93 மாலை 3.00 மணி

அச்வேலிப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது உயிர்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளை சர்வதேச விதிகளை மீறி செஞ்சிலுவைக் கொடியை உதாசீனம் செய்து வீசப்பட்ட குண்டிற்கு பலியாகிய யாழ் செஞ்சிலுவைச்சங்க உபதலைவர் திரு. க. புவனேந்திரன் அவர்களுக்கு ஏற்பட்ட சம்பவம் மனிதநேய பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், தொண்டர்கள், ஆகிய எம் அனைவருக்கும் பொதுவானதாகவே கருதுகிறோம்.

சர்வதேச விதிமுறைகளை கண்காணித்து தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தாம் சார்ந்த அமைப்பின் சார்பான ஒருவரையே பாதுகாக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தொண்டர் அமைப்புக்கள் இச்சம்பவம் தொடர்பாக மௌனம் சாதிக்கின்றன.

தொண்டர்கள், பணியாளர்கள் ஆகிய நாம், மனிதநேயப்பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை திரு. க. புவனேந்திரன் அவர்கள் பலியாக்கப்பட்டமைக்கான எமது அதிருப்தியை காட்டுமுகமாக எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 13-04-93 மாலை 3 00 மணிக்கு வை. எம். சி. ஏ மண்டபத்தில் (யாழ்ப்பாணம்) ஆராயவுள்ளோம். மேற்படி கூட்டத்தில் சமூக சேவை அமைப்புக்களின் தொண்டர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும்படி கோருகிறோம்.

அமைப்புக்குழு,
சமூகசேவை அமைப்புகளின்
தொண்டர்கள், பணியாளர்கள்.

(C/4838)

---

## விளையாட்டு நிகழ்வுகள்

அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தின் வருடாந்த மெல்வல் ஓநர் விளையாட்டுப் போட்டி நாளை புதுவருடத் தினத்தன்று காலையில் நடைபெறும். மாலையில் கலைவிழா இடம்பெறும். (உ-13)

o o o

புதுவருடத்தை ஒட்டி நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் விளையாட்டுப் போட்டித் தொடரின் கரப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு முடமாவடி ஞானவைரவர் மைதானத்தில் இடம்பெறும். (உ-143)

o o o

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஸ்ரீ முருகன் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் அணி மோதும்.

o o o

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகளின் விவரம் வருமாறு:-

★ 3 மணி:- புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி எதிர் இளவாலை யங் ஹென்றியன் வி. க. அணி

★ 4 மணி:- அளவெட்டி விநாயகர் வி. க. அணி எதிர் அராலி அண்ணா வி. க அணி

o o o

யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் டொனால்ட் கணேஷகுமார் ஞாபகார்த்தமாக நடத்தும் நான்காவது வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் நாளை காலை 9 மணிக்கு பற்றிஷியன் அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் அணி மோதும்.

நாளை மறுதினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் கால் இறுதியாட்டம் ஒன்றில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதும்.

இந்த ஆட்டங்கள் இரண்டும யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

o o o

அரியாலை 74 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை ஒட்டிய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 10-30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடைபெறும் — 12 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — இந்த ஆட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு கொக்குவில் வளர்மதி அணியும் ஸ்ரான்லி அணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (உ)

o o o

யாழ் மாவட்ட கிரிக்கெட் கழகங்களின் ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் யாழ் செயலகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும்— ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட —கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர் வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பித்த சகல கழகங்களினதும் பிரதிநிதிகளை நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரிக்கு சமூகம் தருமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அலுவலர் கேட்டுள்ளார் (உ)

### சங்காபிஷேகம்

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயிலில் புதுவருடத்தை முன்னிட்டு நாளை புதன் கிழமை சங்காபிசேகம் நடைபெறவுள்ளது. (இ-11)

### பாடசாலைகளில்

நல்லை கலையருவி மன்றத்தினதும் கலைமகள் பாலர் பாடசாலையினதும் புத்தாண்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும். (த-111)

### பென்ஷன் வவுச்சர்கள் வந்தன

ஏப்ரல் மாதத்துக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் நேற்றுப் பருத்தித்துறையை வந்தடைந்த 'வசதுவ' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறது. (உ-5)

### எழுப்புதல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 13

சுண்டிக்குளியில் உள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபையில் இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன் கிழமையும் இளைஞர்கள், யுவதிகளுக்கான விசேட எழுப்புதல் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

காலை 9.00 மணிமுதல் மாலை 6 00 மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகளில் 4.00 மணிக்கு சுவிசேஷ தெய்வீக சுகமளிக்கும் ஆராதனை இடம்பெறும். (இ)

---

"நீ உன் வாலிப் பிராயத்திலே
உன் சிருஷ்டிகரை நினை" (பிரசங்கி 12:1)

யாழ்ப்பாணத்தில் உள்ள
வாலிப ஆண்கள்
பெண்களுக்கான **விசேட அழைப்பு**

**இரு நாட்கள் எழுப்புதல் கூட்டங்களும்
சுவிசேஷ தெய்வீக சுகமளிக்கும்
ஆராதனைகளும்**

இடம்:- இலங்கை பெந்தெகொஸ்தே சபை, 111, கண்டி வீதி, சுண்டிக்குளி.

காலம்:- இன்று செவ்வாய்க் கிழமையும் நாளை புதன கிழமையும்

நேரம்:- மு. ப. 9-00 மணி முதல் பி. ப 6-00 வரை

சுவிசேஷ சுகமளிக்கும் ஆராதனைகள் பி.ப. 4.00 மணிக்கு (இரு நாட்களும்) நடைபெறும்.

காலையில் வேதபாடங்கள்

★ தங்குமிட வசதி ஒழுங்குசெய்து தரப்படும்.
★ இலவச உட்பிரவேசம்.
★ காணிக்கை சேர்க்கப்படமாட்டாது.
★ வாலிபரை அன்புடன் அழைக்கின்றோம்.

வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே. (சங்கீதம் 119:9)

(25232)

---

" தமிழ் தமிழ் என நீ சொல்லு "

## யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 35-ஆவது ஆண்டு தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் 13-04-93 செவ்வாய்க்கிழமை-

ஏழாம் நாள்.

மாலை 7 00மணி

செல்வி சத்தியபாமா முத்துக்குமாரு — வீணை
செல்வன் ப. ரதிரூபன் — மிருதங்கம்

7-30மணி

செல்வி ம. கிருஷ்ணவேணி — பாட்டு
செல்வி பாக்கிய லட்சுமி நடராஜா — வயலின்
செல்வன் S. கமலதாஸ் — மிருதங்கம்

8-15 — 9-30 மணி

திரு. சி பத்மலிங்கம் — பாட்டு
திரு. உ. இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. மா. சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு சதா. வேல்மாறன் — கடம்

விழா சிறக்க வாழ்த்துவோர்;
✶ இசை அபிமானி: S. சுந்தரம்
30, அரச வீதி, நல்லூர்.
✶ யது நுண்கலை நிலையம்:
அரியாலை.

(25234)

---

**பாரதி ரியூசன் சென்ரர்**
சித்தன்கேணி

**A/L 95 புதிய பிரிவு**
நடைபெறுகின்றன
(யாழ் ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்ற ஓர் நிறுவனம்)

பொருளியல் — திரு. மகேந்திரம்
கணக்கியல் — திரு. SAM
வர்த்தகம் — திரு. பசில்
அளவையியல் — திரு. சோதிலிங்கம்
தமிழ் — திரு. பாலா
இந்துநாகரிகம் — திரு. பாலா
அரசியல் — திரு. கியூபேட

**A/L - 94 புதிய பிரிவு**
**A/L - 93 PAPER CLASSES**
நடைபெறுகின்றன. (5886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் நெடுஞ்சாலைகள் வட.-கிழக்கிலிருந்து பிரிப்பு!

திருகோணமலை, ஏப். 13

கந்தளாய் நெடுஞ்சாலைகளை அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து பிரித்து பிற மாகாணங்களும் இணையும் அமைப்பு ஒன்றுக்கு ஒப்படைத்துள்ளதாக திருகோணமலையிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

1992 டிசம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் காணி அமைச்சின் செயலாளர் தலைமையில் திருகோணமலையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இதற்கான உத்தரவு அவரால் பிறப்பிக்கப்பட்டது.

கந்தளாயில் உள்ள நெடுஞ்சாலைகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை உடனடியாகக் காணி அமைச்சுக்கு அனுப்பும்படியும் அவர் திருகோணமலையில் உள்ள அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் காணி அமைச்சர் திருகோணமலைக்குச் சென்று மாநாடு ஒன்றை நடத்தி கந்தளாய் நெடுஞ்சாலைகள் பற்றிய செயலாளரின் உத்தரவை அங்கீகரித்தார்.

சந்தளாய் நெடுஞ்சாலைகளை மாகாணசபை எல்லைக்கு வெளியே எடுத்து முன்னர் இல்லாத ''பிற மாகாணம் இணைந்த அமைப்பு''க்குள் கொண்டு வந்தது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று கருதப்படுகிறது. [த-க]

# பாக். முன்னாள் தளபதி நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்

## மனைவி முறைப்பாடு

இஸ்லாமாபாத், ஏப். 13

பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதி அஸ்லம் பெக் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மாரடைப்பால் அவர் இறந்ததாக முன்னர் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அஸ்லம் பெக்கின் மனைவி பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ள முறைப்பாடு ஒன்றில்—

தமது கணவர் நஞ்சூட்டியே கொல்லப்பட்டார் என்று தாம் திடமாக நம்புவதாக் கூறியுள்ளார். (த-எ)

Application For The Post of

**PROJECT - CO - ORDINATOR**

Applications are Invited from Suitable Candidates for the Post of Project Co-ordinator.

1. Age Above 45 Years
2. Experience in Preparation, Implementation and Monitoring of Community Development, Rehabilitation Projects.
3. Salary Not Less Than Rs. 4.000/-
4. Period of Employment One Year.
5. Closing Date: 21 — 04 — 1993.

Applications to be Forwarded to,
The Chairman,
F. R. G. Project Implementation-Organizations,
C/o, N. G. O. Council,
100, Rasavinthoddom,
Jaffna.
[C-4834]

## தமிழ் இசை விழா 7ஆம் நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் தமிழ் இசை விழா ஏழாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று இரவு 7-00 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்ச்சிகளில் வாத்தியக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து பாட்டுக் கச்சேரியும் இடம்பெறும். [இ-111]

## தென்மராட்சியில் 5,747 பேருக்கு காய்ச்சல்

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் தென்மராட்சிப் பகுதிகளில் 5 ஆயிரத்து 747 பேர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 277 பேர் மலேரியா காய்ச்சலினாலும், 56 பேர் மூளை மலேரியாக் காய்ச்சலினாலும் ஒருவர் கலப்பு மலேரியா காய்ச்சலினாலும் பீடிக்கப்பட்டதாக வைத்தியசாலைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (உ-117)

## மாநாடு ஆரம்பம்

புதுடில்லி, ஏப். 13

நாடாளுமன்றங்கள் சங்கத்தின் 89 ஆவது மாநாட்டை இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா நேற்றுமுன்தினம் புதுடில்லியில் ஆரம்பித்து வைத்தார். இந்த மாநாடு ஆறு நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்றங்களின் உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றுகின்றனர். [உ-6]

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

வடமராட்சி கிழக்கில் கால்நடை வளர்ப்போர்களுக்கான பயிற்சி வகுப்பை நடத்துவதற்கான ஒழுங்குகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் (யாழ். மாவட்ட கடற்புலிகள் பிரிவு) மேற்கொண்டுள்ளது.

இந்த பயிற்சி வகுப்பிலே கால்நடைகளுக்கான நோய்களின் அறிகுறி, முதலுதவி, வளர்ப்பு முறைகள் பற்றியும் விளக்கவுரைகள் இடம்பெறவுள்ளன. (உ)

## அன்பளிப்பு

வலி-வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சனசமூக நிலையங்களுக்கு, வலி-வடக்கு பிரதேச சபை பந்து மற்றும் உபகரணங்களை அண்மையில் வழங்கியது.

தகுதி பெற்ற முப்பதுக்கும் அதிகமான சனசமூக நிலையங்களுக்கு வலி வடக்கு பிரதேசசபை செயலர் திரு டி. வி. எம். இராசசிங்கம் இவற்றை வழங்கினார். பிரதேசசபை ஆணையாளர் திரு. [illegible] முன்னிலையில் இவை [illegible]

தென்னிந்தியத் திருச்சபை
யாழ். பேராயம்
**பெண்கள் ஒன்றியம்**
பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம்,
மானிப்பாய்.

**பொருட் காட்சியும், சான்றிதழ் வழங்கலும்**

17 - 04 - 1993 சனிக்கிழமை மாலை 3-00 மணி
தொழிற் பயிற்சி நிலையம்,
கிறீன் வைத்தியசாலை,
மானிப்பாய்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
பெண்கள் ஒன்றியம்,
யாழ். தென்னிந்தியத் திருச்சபை.
(சி-4836)

தென்னிந்திய திருச்சபை
யாழ். பேராயம்
**பெண்கள் ஒன்றியம்**
**தேவை**

தையல் ஆசிரியை

மானிப்பாயில் இயங்கும் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு, சகல விதமான தையல் கலைகளும் கற்பிக்கக் கூடிய தகைமையுடைய ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

சகல விவரங்களுடனும் 20 - 04 - 1993க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகவரி:
செயலாளர். பெண்கள் ஒன்றியம்,
தென்னிந்திய திருச்சபை. யாழ் பேராயம்,
மே/பா , குரு இல்லம், மானிப்பாய்.
[சி-4835]

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இராசரத்தினம் பிரிதிவிராஜ்**
(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)
(லண்டன்)

தோற்றம்: 07-06-1962
மறைவு: 01-04 1986
திதி: 13-04-1993

ஆசை மைந்தனே அன்பான மைத்துனனே
பாசமிகு சோதரனே பண்பு சால் நண்பனே
காவியம் பல படைப்பேன் என்று நீ கடல் கடந்தாய்
ஆனால் காலத்தால் அழியாமல் காவியமாய் -
ஆகிவிட்டாய்!
ஓவியமாய் நிறைந்துவிட்ட உன் உருவை எண்ணுகையில்
கலங்குகின்றோம் கதறுகின்றோம் காலமெல்லாம் -
நாமிங்கே
நீ சொன்ன வார்த்தையின்றும் ரீங்காரமிடுகிறது -
ஆனாலும்
ஓலமின்னும் அடங்கவில்லை ஓயவில்லை
நித்திலமே திரண்டுவந்து பொன்னாரம் சூட்ட முன்பே
நீர்க்குமிழியாகி விட்டாய் நீயெம்மைப் பிரிந்து விட்டாய்
அத்தினமே முதற்கொண்டு அழுதழுது துடிக்கின்றோம்
அழுவதிலே என்ன பயன் - தெளிந்து விட்டோம் -
நாம் இன்று
தேடி நிற்போம் உன் ஆத்ம சாந்தியை!

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டும்;

தந்தை, தாய், தங்கை, மைத்துனன்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(சி-4916)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 10 — 1961
மறைவு: 19 — 03 — 1990

**பஞ்சலிங்கம் பத்மநாதன்**
(B.sc.Ceylon-சமூக சேவைகள் உதவியோகத்தர்)

திதி: 13 - 04 - 1993

சின்னராசா நீ மறைந்து,
ஆண்டுகள் உருண்டோடினாலும்,
உன் நினைவால் துயருறுகின்றோம்.

தாய், சகோதரர், மைத்துனிமார்,
பெறாமக்கள்.

நெசவுசாலை ஒழுங்கை,
மாவட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பளை.
(25230)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள ஒடியோ றெக்கோடிங் உபகரணங்கள், மாஸ்டர் கசட்டுகள், இசைத்தட்டுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சேக்கிள் சென்ரர், பிரதான வீதி, சங்கானை. (25173)

Vespa P.L. 170 விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 63/1, மருதடிலேன், யாழ்ப்பாணம். (25220)

ஹைலைன் பிறவுண் பேட்டு குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (6116)

### தேவை

ஜாம்போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா, வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். கரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி-4894)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமான் கோவிலடி, யாழ்ப்பாணம். (25183)

### புத்தாண்டுப் பலன்கள்

எல்லா இராசிகளின் பலன்கள், புதுவருஷப்பிறப்பன்று செவ்வாய் மாற்றம், கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம் அடங்கியவை ரூ. 8/50. எங்கும் விற்பனையாகின்றது. துர்க்காஸ் ஸ்ரேசனர்ஸ், சுன்னாகம். (நூலாசிரியர் சத்யா) கட்டுடை (25212)

### இலவச திருமண சேவை

32 வயது, அத்தம், செவ்வாய் 2, ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் விவாகம் செய்து அழைக்கலாம். நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில். பிமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி. (25226)

### ENGLISH

English for G. A. Q and Degree ESL. Also for all other Examinations. Three months course, two days a week V. N. Kandasamy A.I B (London), Part-I Inter (London), Sat B A Peradeniya Dip-in - English. No. 87, Thirunelveli, Road, Kokuvil. (25225)

## 95 A/L

### விசேட விலங்கியல் வகுப்பு

R. ஈஸ்வரதாசன்
B. Sc, (Cey.)
Dip. in Ed.

இன்று ஆரம்பம்:
13 - 04 - 93 5 p. m

இல. 33,
குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(சி-4831)

## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

எதிர்வரும் 15 - 04 - 1993 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப இயலாமையால் தயவு செய்து பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள் தவறாது சமுகந்தரவும். சந்தா ரூபா பத்து செலுத்தி உதவவும்.

வே. சந்திரசேகரம்பிள்ளை,
தலைவர்.

ப. புஷ்பரத்தினம்,
செ. விசுவலிங்கம்,
இணைச் செயலாளர்கள்,

யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர். (25196)

## G. A. Q. - 94 (வெளிவாரி)

யாழ். பல்கலைக் கழகத்தினால் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இதற்கான விரிவுரைகள்:

**ஆரம்பம்: 24 - 04 - 1993**
காலை 8மணி

**G. A. Q - 94** பேராதனை

- ★ பேராதனை பல்கலைக்கழகத்தினால் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- ★ விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-4922)

## சதுரங்கப் (CHESS) பயிற்சி

தனிப்பட்ட முறையில் சதுரங்கப் பயிற்சி கொடுக்கப்படும். விவரங்களுக்கு 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை. 161, பிறவுண் வீதி, (வண்ணை ஆங்கில வைத்தியசாலை முன்பாக) வை. கணேசலிங்கம் அவர்களிடம் தொடர்பு கொள்ளவும். (6114)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சண்டிலிப்பாய் மண்ணில்:
23 — 12 — 1916
●
திருநெல்வேலி மண்ணுள்:
25 — 03 — 1992



### ஆனந்தவள்ளி சின்னத்தம்பி

திதி: 13 — 04 — 1993

எத்துயரிலும் தளர்ந்திடாமல்
எதிர்த்தோர்க்கு தலைவணங்கிடாமல்
நேர்மையுடன் நீதி தவறிடாமல்
நாடியோரை இன் முகத்துடன்
ஆதரித்து தன்னலமின்றி
வாழ்ந்து எம்முள்
மங்கா ஒளிச் சுடராய் பிரகாசிக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும் அன்புள்ளங்கள்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர் உற்றார், உறவினர்கள்.

"சபாரட்ணம் லொட்ஜ்",
பலாலி வீதி,
திருநெல்வேலி. (25222)

## மாட்டு வண்டிச் சவாரி

யாழ்ப்பாணம் நியூ லலிதா ஜுவலர்ஸ் ஆதரவில் ஆவரங்கால் வீனஸ் வி. க. நடத்தும் மாட்டு வண்டிச் சவாரி 13 - 04 - 1993 செவ்வாய் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறும்.

பிரவேசம்: ரூபா 10/-

- வீனஸ் வி. கழகம்.

(25229)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**
8-00 — 2-00

மீண்டும் ஒரு புதிய பிரிவு
**பிரிவு - IV**
**ஆரம்பம்: 17 - 04 - 1993**
சனி காலை 8-00 மணி

- ★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
- ★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
- ★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலம் நடைபெறும்.
- ★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி-4908)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வடிவாம்பிகை கணேசன்

தோற்றம்: 17 — 10 — 1939
மறைவு: 24 — 04 — 1992

திதி: 13 — 04 — 1993

தெய்வமாக நின்று எம்மை வழி நடத்திய குடும்பத்தின் குல விளக்கே! அன்போடும், பண்போடும், பாசத்தோடும் எமை ஆளாக்கிப் பெரு வாழ்வு கண்ட அன்புத் தாயே! அம்மா ஏழேழு பிறவிகள் தான் சென்ற போதும், உனைப் போல் ஒரு தாயைக் காண்போமா, சாந்தமுள்ள உன் முகத்தின் சாயல் தானும் எம்மை வாட்டுதம்மா, மறவோம் நாங்கள்.

என்றும் உங்கள் நினைவோடு:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
S. கணேசன்,
131/A, பருத்தித்துறை றோட்,
நல்லூர். யாழ்ப்பாணம். (25228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# மாற்றுவழி வேறில்லை

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பலாலியை மையமாகக் கொண்டு தனது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசங்களை விஸ்தரிக்க இராணுவம் முயலக்கூடும். இடைக்காட்டில் சனிக்கிழமை ஆரம்பமான இராணுவ நடவடிக்கைக்கு ''சூறாவளி - 1'' எனப் பெயர்சூட்டப்பட்டதால் ''சூறாவளி - 2'' ''சூறாவளி -3'' என்று தாக்குதல்களை கட்டம் கட்டமாக விஸ்தரிக்கும் உத்தி உண்டென்று ஊகிக்க இடமுண்டு.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியது போன்று ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் வெற்றி வாய்ப்பைத் தேடிக்கொள்ள வடக்கு-கிழக்கில் யுத்தம் வெல்லப்பட்டுவிட்டதாக காட்டிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆகக்குறைந்தது விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்று சிங்களவர்களின் மனங்களைத் திருப்திப்படுத்த அரசு முயற்சிக்கிறது.

மொத்தத்தில் தமிழர்களின் பிரச்சினையை ஏதோ ஒரு வடிவத்தில் முன்நிறுத்தி அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் ''யுகாந்திர'' வழக்கத்தைச் சிங்கள அரசியல்வாதிகள் கைவிடப் போவதில்லை என்பதை மீண்டும் மீண்டும் அவர்கள் நிருபித்து வருகிறார்கள். பதவிக்கு வருவதற்கு தமிழர் பிரச்சினையைப் பிரதான பற்றுக்கோடாக, பிரதான விவகாரமாக முன்னெடுக்கும் தந்திரத்தைக் கைவிடுவதற்கு இன்னும் அவர்களுக்கு மனம் ஒப்பவில்லை. அரசியல் போட்டியில், அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் ஒருசாராரை மறுசாரார் வெல்வதற்கு தமிழர் பிரச்சினையே நல்ல வட்டி தரக்கூடிய பெருமதியான மூலதனம் என்று ஒவ்வொரு சாராரும் கருதுகிறார்கள்

உள்மனதில் அந்த எண்ணத்தை வைத்துக் கொண்டு தான், வெளியே, வெறும் பேச்சுக்காக தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் அதில் தமக்கு ஈடுபாடிருப்பதாகவும் காட்டிக்கொள்கிறார்கள். சிங்களத் தலைவர்கள் சகலருமே இந்த வகையினர் தான்.

உண்மையாகவே தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்று அவர்கள் மனதார விரும்பினால், ஒருவர் ஒன்றைக் கூறுவதையும் மற்றவர்கள் அதற்கு எதிராகக் குரல் எழுப்புவதையும் தவிர்த்து ஒரே வழி நின்று செயற்படுவார்கள்,

ஆனால் இத்தனை அழிவுகள், இழப்புகளின் பின்னரும் தமிழர் பிரச்சினையை மூலதனமாக வைத்தே தென்னிலங்கைத் தலைவர்கள் அரசியல் லாபம் தேட முயல்கிறார்கள் அதனையே அவர்கள் இனிவரும் காலங்களிலும் கையாள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எனவே தமிழர்கள் தான் தமது வழியை மாற்ற வேண்டும். அதாவது தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குச் சிங்களத் தலைவர்கள் உதவுவார்கள் என்று காத்திருந்து பயன் இல்லை. தமிழர்களே தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். சிங்களவர் வழங்கித் தமிழர்களின் உரிமைகள் கிடைக்கப்போவதில்லை. தமிழர்கள் தாமாகவே தமது உரிமைகளை வென்றெடுத்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்கான மனப்பலத்தை மேலும் வளர்க்க வேண்டும். அதன் பொருட்டு தொடரும் சோதனைகள், வேதனைகள், நெருக்குதல்கள், இறுக்குதல்கள், அழுத்தங்கள் அனர்த்தங்களை தாங்கும் சக்தியை வளர்த்து காலடி எடுத்து வைத்த பாதையில் நம்பிக்கையுடன் தொடர்ந்து நடக்க வேண்டும். அதனை விட வேறு வழி - மாற்றுவழி கிடையாது. அப்படி ஒரு மாற்று வழி இருப்பின் சரணாகதியும் அடிமை வாழ்வுமாகத் தான் இருக்க முடியும்.

## புத்தாண்டு பூசைகள்

யாழ்ப்பாணம், ஏப் 13

ஸ்ரீமுக புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் விசேட அபிசேகங்களும், பூசைகளும் நடைபெற உள்ளன.

நல்லூர் கந்தசாமி கோவில், நல்லூர் சிவன், நல்லூர் கைலாசபிள்ளையார், நல்லூர் வீரமாகாளி அம்மன், தெல்லிப்பழை துர்க்காதேவி, அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர், யாழ் சிவன், யாழ். வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயங்களிலும்—

உரும்பராய் கற்பக விநாயகர், அளவெட்டி வடக்கு கும்பளாவளைப் பிள்ளையார் கோவில், அளவெட்டி பெருமாக்கடவை பிள்ளையார், மாகியப்பிட்டி சிவன், மருதனார் மடம் பல்லப்ப வயிரவர், தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் சிவன் ஆலயங்களிலும் புத்தாண்டு தின விசேட அபிசேகங்களும் பூசைகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேர்த் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 13

சித்திரை முதல் நாளான நாளை புதன்கிழமை, குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் தேர்த் திருவிழாக்கள் நடைபெற உள்ளன. அனேகமான விநாயகர் ஆலயங்களிலேயே தேர்த்திருவிழா இடம்பெறுகிறது.

வண்ணை - கலட்டி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நாளை காலை 8-30 மணிக்குத் தேர்த்திருவிழா நடைபெறும்.

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலில் புதனன்று காலை 10 மணிக்கும், அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் காலை 9 மணிக்கும், நல்லூர் பண்டாரக் குளம் மருதர்வளவு விநாயகர் ஆலயத்தில் காலை 8 மணிக்கும் தேர்த்திருவிழாக்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெளிச்சம் இன்று வெளியாகுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 13

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் சித்திரை மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் வழங்கிய அன்னை பூபதி பற்றிய நினைவுச் செய்தியும், புதுவை இரத்தினதுரை அவர்களின் பாடலும் இடம்பெறுகின்றன. (உ)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வு

தென்மராட்சி, ஏப். 13

தியாக தீபம் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி தென்மராட்சி மினிபஸ் ஒன்றியத்தினர் நாளை மறுதினம் உண்ணா நோன்பினை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நடாத்தவுள்ளனர்

அன்றைய தினம் இரவு 7 00 மணிக்கு அஞ்சலிக் கூட்டமும் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (உ-117)

## மன்னாரில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 13

மன்னார் பரப்புக்கடந்தானில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திய ''புக்காரா'' விமானம் மீண்டும் பிற்பகல் 1.20 மணியளவில் இரண்டாவது தடவையாகவும் குண்டுகளை வீசியது.

பிற்பகலில் மக்கள் குடியிருப்புகள் மீது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. (உ-3)

## படையினரின் புதிய முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 18

மட்டக்களப்பு 15 ஆம் கிராமத்தில் விசேட அதிரடிப் படையினரின் முகாம் ஒன்று கடந்த வியாழக்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவ மதிப்பீட்டுச் சபையின் சிபார்சை மீறி

# தனிப்பட்ட வியாபாரி ஒருவரிடம் இலங்கை ஆயுதக் கொள்வனவு

## பிரிட்டிஷ் நிறுவன கேள்விப்பத்திரம் நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 13

இராணுவ மதிப்பீட்டுச் சபை செய்த சிபார்சை புறக்கணித்து விட்டு இலங்கை ஆயுத வியாபாரி ஒருவர் மூலம் பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்ய இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்று சலாடின் கவச வானங்களுக்குத் தேவையான 76 மி. மீ. குண்டுகள், ரவைகள் மற்றும் வெடிமருந்துகளை வழங்கத் தயாராக இருப்பதாக கேள்விப் பத்திரம் சமர்ப்பித்தது. குறிப்பிட்ட ரக வெடிமருந்துகள் மற்றும் குண்டுகளை தயாரிக்கும் ஒரே ஒரு நிறுவனமாக அந்த பிரிட்டிஷ் நிறுவனம் இருக்கிறது.

பிரிகேடியர் ஒருவரின் தலைமையிலான இராணுவ மதிப்பீட்டுச் சபையும், பிரிட்டிஷ் நிறுவனத்திடம் இருந்தே ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் படி சிபார்சு செய்தது.

எனினும்—

பிரிட்டிஷ் நிறுவனம் குறிப்பிட்ட விலையிலும் பார்க்க கூடுதல் விலைக்கு விற்க முன் வந்திருக்கும் இலங்கை ஆயுத வியாபாரி ஒருவரின் கோரிக்கையையே இராணுவம் ஏற்றது.

30 தினங்களுக்குள் அவ்வாயுதங்கள்.

தேவைப்பட்டதாலும்—

குறிப்பிட்ட காலத்தினுள் அவற்றை வழங்கக் கூடியவராக இலங்கை ஆயுத வியாபாரி இருந்ததாலுமே அவரின் கோரிக்கை ஏற்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அந்த இலங்கை ஆயுத வியாபாரிக்கு ஓமானுடன் தொடர்பு இருந்து வருகின்றது.

இந்த வியாபாரி கேள்விப் பத்திரம் எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவ மதிப்பீட்டுச் சபையின் சிபார்சு பற்றி பிரிட்டிஷ் நிறுவனத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது இதன் காரணமாக இப்பிரச்சினை பிரிட்டிஷ் அரசின் கவனத்தை ஈர்க்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த ஆயுத ஏற்றுமதித் தடையை பிரிட்டிஷ் அரசு கடந்த ஆண்டு நீக்கியிருந்தது.

அதனைத் தொடர்ந்து, யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்களை இலங்கைக்கு வழங்குவதில் பிரிட்டிஷ் அரசு அக்கறைகாட்டி வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பிரச்சினை குறித்து விசாரிக்கப்பட்டபோது பாதுகாப்பு மற்றும் இராணுவ அதிகாரிகள் மௌனஞ்சாதித்தனர். (உ-எ)

# 1992 ஜி.சீ.ஈ. (உ.த.) பரீட்சை புள்ளிகளின் விவரம் வந்தது

1992 இல் நடைபெற்ற ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளி விவரங்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

கொழும்பு சென்றிருந்த பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்று 'குமாரி' கப்பல் மூலம் யாழ். வந்து சேர்ந்தார். அவர் தம்முடன் பரீட்சைப் புள்ளிகளின் விவரங்களையும் எடுத்து வந்தார்.

பாடசாலை பரீட்சார்த்திகளின் முடிவுகளை யாழ் கல்வி அலுவலகத்தில் இன்று கல்லூரி அதிபர்கள் பெறலாம் என்றும் —

தனியாரின் பரீட்சை முடிவுகள் இன்று தபாலில் சேர்க்கப்படும் என்றும் — கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். [உ 3 6]

# 1991 புலமைப்பரிசில்பரீட்சை: வெட்டுப் புள்ளி நிலை 135

1991 ஆம் ஆண்டு நடந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சையின் வெட்டுப்புள்ளி 135 ஆக குறைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையின் முடிவுகள் கடந்த மாதம் 11 ஆம் திகதி யாழ். கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட சமயம் அப்பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேல் எடுத்தோரின் விவரங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் இருந்து நேற்றுத் திரும்பிய யாழ் கல்விப் பணிப்பாளர் புதிய வெட்டுப் புள்ளி பற்றிய தகவலை எடுத்து வந்தார்.

மேற்படி பரீட்சையில் 135 முதல் 149 வரை புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளின் பட்டியல் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது. (உ-3)

கொட்டகலைக்கு செல்ல முடியாத

# 142 பட்டதாரிகளுக்கு இங்கு நேர்முகப் பரீட்சை நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 13

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் நியமனத்துக்காக கொட்டகலையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாது போன 142 பட்டதாரிகளுக்கு, யாழ்ப்பாணத்தில் விசேட நேர்முகப் பரீட்சைகளை நடத்த கல்விச் சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

கொட்டகலையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாகத் தோற்ற முடியாது போனவர்களுக்காக விசேட நேர்முகப் பரீட்சை ஒன்றை நடத்த அனுமதிக்குமாறு கொழும்பில் கல்விச் சேவை ஆணைக்குழு தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டிருந்தார்.

அதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டிருப்ப தாகவும்—

விரைவில் இங்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும்—கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (உ-3)

# சு.கவின் புதிய 2 எம்.பிக்கள்

கொழும்பு, ஏப். 13

சுதந்திரக் கட்சியின் புதிய எம்.பிக்களாக திருமதி அமரகீர்த்தியும் திரு பந்துல பஸ்நாயக்காவும் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் இருவரும் இம்மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது புதிய எம்பிக்களாக பதவிப் பிரமாணஞ் செய்து கொள்வார்.

காலிமாவட்ட எம். பியாக இருந்த திரு. அமரஸ்ரீ தொடங்கொட தென் மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவதால், அவரின் இடத்துக்கு கரந்தெனியாவைச் சேர்ந்த திருமதி அமரகீர்த்தி எம்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

குருணாகல் மாவட்ட எம்பியாக இருந்த எஸ் பி. நாவின்ன வடமேற்கு மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவதால் அவரது இடத்துக்கு பந்துல பஸ்நாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். (உ எ)

முதலாம் இடம் பெற்ற போதும்

# ஜப்பான் சுற்றுப் பயண வாய்ப்பை இழந்த மாணவன்

யாழ்ப்பாணம், ஏப். 13

1992 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் ஜப்பானுக்கு இலவச டிக்கெட்டில் சுற்றுப் பயணம் செய்யும் வாய்ப்பை இழந்துள்ளார்.

யாழ். சென். பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் பிருந்தாபன் 199 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றிருந்தார் என்பது தெரிந்ததே.

ஜப்பான் சுற்றுப்பயணம் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த [illegible] வயதுடையவராக இருந்ததாலேயே அந்த வாய்ப்பை அவர் இழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரீட்சையில் அகில இலங்கையில் இரண்டாம் இடத்தை இரு மாணவர்கள் பெற்றிருந்த போதிலும், வறுமைக்கோட்டுக்குக் கீழ் உதவி பெற தகுதியானவர் என்ற அடிப்படையில், ஆனைப்பந்தி மெதடிஸ்த பாடசாலை மாணவனான மோகனஜீவ் ஜப்பான் சுற்றுப் பயணத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சுற்றுப் பயணத்திற்காக மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கொழும்புக்கு வருமாறு இந்த மாணவனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (உ 3)

## ஹெலி வேட்டு

ஏழாலை மேற்கு. ஏப் 13

ஏழாலை வடக்கு, ஏழாலை மத்திய பகுதிகளை நேற்றுக் காலை 10 80 மணியளவில் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று அப்பகுதிகள் மீது வேட்டுக்களைத் தீர்த்தது

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஏப், 12

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கடற்பிராந்தியத்தில் இருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டு ஒன்று இளாலி எழுச்சி கிராமத்தில் வீழ்ந்து வெடித்ததில் சிறுவன் ஒருவன் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது (உ-15)

## வங்கியில் இன்று கொடுப்பனவு

இலங்கை வங்கியில் சமீப காலமாக நிலவி வந்த பணத் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக கொழும்பில் இருந்து பணம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நேற்று வந்த ''குமாரி'' கப்பலில் போதியளவு பணம் எடுத்து வரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

இதே வேளை, இன்று செவ்வாய்க்கிழமை விடுமுறை தினமாக இருந்த போதிலும் வாடிக்கையாளரின் நன்மை கருதி மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகள் பணக்கொடுப்பனவுக்காக காலை 9 மணி முதல் 11 மணி வரை திறந்திருக்கும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-17]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செய்முறை பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 13

1992 ஜி. சி. ஈ. [சாதாரண] தர பரீட்சையின் சங்கீத நடன பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்படும் என்றும் —

பாடசாலை பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை 16, 19 ஆம் திகதிகளில் அதிபர்கள் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14 — 12 — 1915 | 25 — 03 — 1992 |

அமரர்

### டாக்டர் சின்னத்தம்பி செல்வராசா

திதி: 13 — 04 — 1993

அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து, அயராது உழைத்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

16, பழம்றோட்.
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(25221)

---

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தம்பிப்பிள்ளை J. P.

(கைதடி)

கைதடி நாவற்குழி கிராமசபை, கைதடி சைவச் சிறுவர் இல்லம், கைதடி கிழக்கு சனசமூக நிலையம், இந்து வாலிபர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், கைதடி விரகத்திப் பிள்ளையார் கோவில், கைதடி விக்கினேஸ்வர அ. சபை உபதலைவரும், லீலாவதி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான கந்தையா தம்பிப்பிள்ளை சமாதான நீதிவான் அவர்கள் 12-04-93 ஆம் திகதி திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் மீனாட்சிப் பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெரியதம்பி (இளைப்பாறிய ஓவசியர்), தங்கமுத்து, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பலீலாவதி, புஸ்பராசா, காலஞ்சென்ற புஸ்பராணி, புஸ்பராசேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பவதி, புஸ்பரதி, புஸ்பமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ. சந்தசாமி (உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக் கழகம்), விஷ்ணுதேவி, வே. சிவச்சந்திரலிங்கம் (V. மாணிக்கம் பிறதர்ஸ் கொழும்பு), இ. குழந்தைவடிவேலு (ஸ்ரீ சச்சிதானந்தா என்டர்பிறைஸ்), சு. ஜெயவிக்னேஸ்வரன் (இ. போ. ச., கோண்டாவில்), தி. நந்தகுமார் (பிரதிபனா ஸ்ரோர்ஸ்), சி. சிவதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷாமினி, மயூரன், சசிகலா, சுவகணனன், கிவரஞ்சனி, ரஜிதா, தவரஞ்சிதா, பதிவர்ணன், சிவகஜனி (ஜேர்மனி), சிவபாலினி, ஸ்ரீசஷ்டிகாந்தா, கௌசியா, விலோஜிகா, வேணுஷா, பிரகாஷ் (ஜேர்மனி), பிரசாந் (ஜேர்மனி), பிரதிபனா ஆகியோரின் அன்புப் பேரனும், க. முருகேசுவின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-04-93) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:

த. புஸ்பராசா (மகன்),
லீலாவதி ஸ்ரோர்ஸ்

ராஜேஸ்வரி பவனம்,
கைதடி.

(6117)

### அகிலேசர் சம்புலிங்கம்

சரசாலையைச் சேர்ந்த இளைப்பாறிய சுகாதார உத்தியோகத்தர் அகிலேசர் சம்புலிங்கம் கொழும்பில் காலமானார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியை ஜானகியின் அன்புக் கணவரும், ஜானலிங்கம், ஜெயலிங்கம், சிவாஜிலிங்கம், அருண்மொழி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிளாவின் அன்பு மாமனாரும், திருமதி அருட்சோதி இராமச்சந்திரனின் (இளைப்பாறிய ஆசிரியை) அருமைச் சகோதரரும், டினேஸ், சதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:

த. இராமச்சந்திரன்
(மைத்துனர்)

(25224)

---

# பிரட்மன் ஆரம்பித்த பேச்சை பகிஷ்கரிப்பதற்கு தீர்மானம்

## கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ் இரண்டும் முடிவு

கொழும்பு, ஏப். 13

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனினால் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுவதில்லை என்று ஈ. பி. ஆர். எல். எவ்வும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தீர்மானித்துள்ளன.

''திட்டவட்டமான நகல் யோசனை ஏதும் எம் முன் முன்வைக்கப்படாத நிலையில் இப்பேச்சுக்களில் அர்த்தமோ, நோக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை'' என்று ஈ. பி. ஆர். எல். எவ். அரசியல் குழு உறுப்பினர் எல். கேதீஸ்வரன் சண்டே ரைம்ஸுக்குத் தெரிவித்தார்.

இம் முயற்சி இதய சுத்தியாக இருக்குமிடத்து சமாதானத் திட்டம் ஒன்றை உருவாக்க தமிழ்க் கட்சிகள் ஒத்துழைக்கும். இம் முயற்சி ஒரு அரசியல் ''ஸ்டண்ட்'' (சாகசம்) என்று நாம் காணும் பட்சத்தில் நாம் ஒத்துழைப்பை விலக்கிக் கொள்வோம்'' — என்றும் அவர் கூறினார்.

பிரட்மன் வீரக்கோனின் இம்முயற்சி குறித்து அவர் நடத்திய பேச்சுக்களில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் முதலில் குழப்பமடைந்திருந்தனர் என்றும் —

தெரிவுக் குழுவின் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்கும் நோக்கத்துடனேயே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர்கள் பின்னர் உணர்ந்து கொண்டனர் என்றும் திரு. கேதீஸ்வரன் சொன்னார்.

திரு. வீரக்கோன் நடத்திய இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் புளொட் தலைவர் த. சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

13 ஆவது அரசமைப்பு சட்டத் திருத்தத்தில் சிலமாற்றங்களைச் செய்யும் சாத்தியக் கூறுகள் பற்றி அப்பேச்சுக்களில் ஆராயப்பட்டதாக சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஈ பி ஆர். எல் எவ் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈரோஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் விசேடமாக அழைக்கப்பட்ட மற்றும் சிலருமே இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். திரு பிரட்மன் வீரக்கோன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

### ஊரடங்கு நீக்கம்

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் தவிர்ந்த, ஏனைய பகுதிகளில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கூட்டுப்படைகள் தலைமையகம் நேற்று அறிவித்தது. [உ-எ]

### அடித்துக் கொலை

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த ஐயாத்துரை நித்தியானந்தன் (45 வயது) என்பவர் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சடலம் தொங்கவிடப்பட்டிருந்தது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான அவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அவரது சடலம் சுரவத்தனை என்னும் இடத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது.

தமிழீழ காவல்துறையினர் சடலத்தை எடுத்து மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட மரண விசாரணையில் கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (அ-155)

---

### புதிய....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை வாங்குவது தொடர்பாக இலங்கை அரசுக்கும் சீனாவின் பிரதான ஆயுத உற்பத்தி நிறுவனமான நொறிங்கோவுக்கும் இடையே உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

#### குத்தகைக்கு

இந்த உடன்பாட்டின்படி, முதலில் வை-8 விமானம் ஒன்று இலங்கை விமானப் படைக்கு குத்தகைக்கு வழங்கப்படும். இவ்விமானம் விரைவில் கொழும்பை வந்தடையவுள்ளது.

கொழும்பில் பழுதடைந்த நிலையில் உள்ள வை-8 விமானத்துக்கு பொருத்தவென சில ரஷ்ய உதிரி என்ஜின்களையும் இவ்விமானம் கொழும்புக்கு எடுத்துவரும்.

அவை பொருத்தப்பட்டவுடன் இங்குள்ள வை 8 விமானம் மேலும் திருத்தவேலைகளை மேற்கொள்ளுவதற்காக சீனாவுக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

4 என்ஜின்கள் பொருத்தப்பட்ட வை-8 விமானம் ஒரே சமயத்தில் நூறு சிப்பாய்கள் வரை ஏற்றிச் செல்லக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

---

### ஜெனிவா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரிக்கு விஜயம் செய்திருந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக கொழும்பு அலுவலக அதிகாரிகள் அங்கு நிலவிய நிலைவரங்கள் குறித்தும்—

அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதை திருத்த வேலைகள் குறித்தும்—விசேட அறிக்கை ஒன்றை தயாரித்திருந்தனர்.

பாதை திருத்த வேலைகளுக்கும், ஏனைய வாகன வசதிகளுக்கும் தேவையான நிதி வளங்கள் குறித்தும்—

பாதையைத் திறந்து செயற்படுத்தும் போது ஏற்படக்கூடிய செலவீனங்கள் மற்றும் ஆளணிக் தேவைகள் குறித்தும்—விளக்கி பூர்வாங்கச் செயற்பாட்டு அறிக்கையை அவர்கள் ஜெனிவாவுக்கு அனுப்பியிருந்தனர்.

இந்த அறிக்கையை பரிசீலனை செய்த தலைமையக அதிகாரிகள் அதற்கு அங்கீகாரம் வழங்கி, நிதி ஒதுக்கவும் ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரியப்படுத்தி உள்ளனர்.

அங்கீகாரம் கிடைத்ததைத் தொடர்ந்து கொழும்பு ஐ.நா அலுவலக அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

---

### உபஜனாதிபதியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாணத்துக்கு ஒரு மாகாண சபையும் —

கிழக்கு மாகாணத்துக்கு ஒரு மாணசபையும் அமைக்கும் இன்னொரு யோசனையும் தெரிவுக்குழுவின் அடுத்த அமர்வில் [illegible] என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

#### அதிபர் தரம் II பதவியுயர்வு

## நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற மீண்டும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப் 13

2 ஆம் தர அதிபர் பதவி உயர்வுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றமுடியாது போன 42 அதிபர்களுக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

3 ஆம் தரத்தில் கடமை ஆற்றிய அதிபர்கள் 2 ஆம் தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடத்தப்பட்டதாகவும் —

அந்தப் பரீட்சையில் தோற்ற முடியாது போன 42 பேருக்கும் மீண்டும் வாய்ப்பளிக்கும் விதத்தில் கொழும்பில் விசேட நேர்முகப் பரீட்சையை நடத்த கல்விச் சேவைக் குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் — பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்த 42 பேருக்குமுரிய நேர்முகப் பரீட்சைகளுக்கான கடிதங்களை பணிப்பாளர் எடுத்து வந்துள்ளார்

#### இரு வலயங்களின் கீழ்

## 14 பிராந்திய கல்வி பிரிவுகள் யாழ் மாவட்டத்தில்!

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். மாவட்டத்தில் 14 பிராந்திய கல்வி அலுவலகங்களை உருவாக்குவதற்கு முன்னோடியாக அவற்றில் பணிபுரிவதற்குத் தேவையான பிரதிப் பணிப்பாளர், எழுதுவினைஞர்கள் பற்றிய விவரங்களை உடன் அனுப்புமாறு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளது

யாழ். மாவட்டத்தை இரண்டு வலயங்களாகப் பிரிக்கும் திட்டத்தின் கீழ், வலயம் இரண்டுக்கான பணிப்பாளரை நியமிக்க மாகாண கல்வி அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளதாகவும்—

வலயம் ஒன்றுக்கான பணிப்பாளரை நியமிக்க விண்ணப்பம் எதுவும் கோரப்படவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தமிழக கண்ணிவெடியுடன் புலிகளுக்கு தொடர்பில்லை

சந்தனக் கடத்தல் காரன் வீரப்பனைப் பிடிக்கச் சென்ற போது இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்படவில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழ்நாடு சட்டசபையில் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

அவருக்கு முன்னர் சபையில் பேசிய தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம். எல். ஏயுமான பால சுப்பிரமணியம் —

''முன்னர் தமிழகத்தில் இருந்த புலிகளின் பயிற்சி முகாமில் வீரப்பனும் இருந்திருக்கலாம்; இந்தக் கண்ணிவெடிச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருக்கலாம்.'' — என்று குறிப்பிட்டார். (உ-எ-க)


யாழ்ப்பாணம்

### அருள்மிகு அத்தியடி பிள்ளையார் கோயில்

## தேர் உற்சவம்

14 - 04 - 1993 புதன்கிழமை காலை 8-00 மணிக்கு வசந்த மண்டப பூசையும், பஞ்சமுகார்ச்சனையும் தொடர்ந்து காலை 9-00 மணிக்கு எம் பெருமான் தேர் உற்சவமும் நடைபெறும்.

(சி-4913)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org